# அழகப்பாபல்கலைக்கழகம்,காரைக்குடி

(தேசியத் தரநிர்ணயக் குழுவின் மூன்றாம் சுற்றுமதிப்பீட்டில் A+ (CGPA : 3.64) தகுதிபெற்றது)

நாள் : 17.11.2017

## குரூப் – 4 / கிராம நிர்வாக அலுவலர் தேர்வுக்கான இலவச பயிற்சி வகுப்புகள்

தமிழ்நாடு அரசு தேர்வாணையம் மூலமாக நடத்த இருக்கின்ற குரூப் – 4 /கிராம நிர்வாக அலுவலர் தேர்வுக்கான அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. இதற்கான எழுத்துத் தேர்வு பிப்ரவரி மாதம் 11ம் தேதி 2018-ல் நடக்க உள்ளது. இத்தேர்வை சிறப்பாக எதிர்கொள்ளும் வகையில் இலவச பயிற்சி வகுப்புகள் அழகப்பா பல்கலைக்கழக தன்னார்வ பயிலும் வட்டத்தின் மூலமாக நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

வருகிற 25 நவம்பர் 2017 முதல் ஒவ்வொரு வாரமும் சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் லெ.சித.லெ. பழனியப்பச்செட்டியார் நினை வரங்கத்தின் தரைத்தளத்தில் இயங்கிக் கொண்டிருக்கும் அழகப்பா பல்கலைக்கழக தன்னார்வ பயிலும் வட்டத்தில் இலவச பயிற்சி வகுப்புகள் நடைபெறும்.

இப்பயிற்சியில் பங்குபெற விருப்பம் உள்ளவர்கள் பழனியப்பச்செட்டியார் நினைவரங்கத்தில் இயங்கும் தன்னார் வபயிலும் வட்டத்திற்கு நேரில் சென்றோ அல்லது 04565 - 223266 என்ற தொலைபேசி எண்ணிலோ, 86759-74989 என்ற அலைபேசி எண்ணிலோ தொடர்பு கொண்டு தங்களது பெயரை பதிவுசெய்து கொள்ளவும். மேலும் alagappauniversitystudycircle@gmail.com என்ற மின்அஞ்சல் மூலமாகவும் பதிவுசெய்யலாம் என பல்கலைக்கழகப் பதிவாளர் (பொ.) பேரா.வி. பாலச்சந்திரன் அவர்கள் தெரிவிக்கிறார்.

பேரா.வி. பாலச்சந்திரன்

பதிவாளர் (பொ.)